00077

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

விஞ்ஞானத் திறமைச் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

TAF2501 – பௌதிகவியல் 3

இறுதிப் பரீட்சை

காலம்: 3 மணித்தியாலங்கள்

திகதி: 23.06.2019 நேரம்: மு.ப 0930 - பி.ப 1230

## பகுதி - I

- இவ்வினாத்தாளானது 25 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது.
- எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.
- ஒவ்வொரு வினாவிற்கும் விடையளிப்பதற்காக விடைப்பத்திரத்தில் தரப்பட்டுள்ள கூடுகளில் புள்ளியிடுவதன் (X) மூலம் மிகப்பொருத்தமான விடைகளை தருக.
- பரீட்சையின் முடிவில் வினாத்தாளானது விடைப்பத்திரத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- இப்பகுதிக்கான மொத்த புள்ளிகள் **40%.**

(1) திண்மமொன்று 10 ℃ இலிருந்து 110 ℃ இற்கு வெப்பமேற்றப்படும் போது அதன் கனவளவில் ஏற்படும் பின்ன மாற்றம் 0.0027 ஆகும். குறித்த திண்மத்தின் நீள விரிவுக் குணகம் ஆனது,

(1) $27 \times 10^{-6} K^{-1}$ (2) $3 \times 10^{-6} K^{-1}$ (3) $27 \times 10^{-4} K^{-1}$

(4) $3 \times 10^{-7} K^{-1}$ (5) $9 \times 10^{-6} K^{-1}$

(2) கனவுரு வடிவிலான குற்றியொன்று 0 ℃ இலிருந்து 100 ℃ இற்கு வெப்பமேற்றப்படுகின்றது. அதன் நீளத்தில் ஏற்படும் சதவீத அதிகரிப்பு 0.1 % எனின் கனவளவில் ஏற்படும் சதவீத மாற்றம் யாது?

(1) 0.1% (2) 0.3% (3) 0.01% (4) 0.03% (5) மேற்கூறிய எதுவுமில்லை

(3) $\gamma$ கனவளவு விரிகைத்திறன் உடைய திரவமொன்று $\alpha$ நீள விரிகைத்திறன் உடைய பதார்த்தத்தினால் ஆக்கப்பட்ட குழாயொன்றினுள் இடப்பட்டுள்ளதனை உரு காட்டுகின்றது. திரவ நிரையின் நீளம் $l_0$ ஆகும். வெப்பநிலையானது $\theta$ இனால் அதிகரிக்கப்படுமாயின் திரவ நிரையின் நீளம்,




(1) $l_0$ (2) $l_0\frac{(1+\gamma\theta)}{(1+\alpha\theta)}$ (3) $l_0(1+\gamma\theta)(1+2\alpha\theta)$

(4) $l_0\frac{(1+\gamma\theta)}{(1+2\alpha\theta)}$ (5) $l_0\frac{(1+\gamma\theta)}{(1+3\alpha\theta)}$

(4) ஒரு நீர்வீழ்ச்சியின் உயரம் 84 m ஆகும். நீர் விழுகையில் அதன் இயக்கப்பாட்டு சக்தியில் அரைவாசி வெப்பச்சக்தியாக மாற்றப்படுகின்றது எனின் வெப்பநிலையில் ஏற்பட்ட அதிகரிப்பு யாது? (நீரின் தன்வெப்பக்கொள்ளளவு = 4200 $Jkg^{-1}K^{-1}$ )

(1) 0.1°C (2) 0.2°C (3) 0.3°C (4) 0.4°C (5) 0.8°C

(5) 100 °C இலுள்ள 10g நீராவியானது 0 °C இலுள்ள 10 g பனிக்கட்டியுடன் கலக்கின்றது. கலவையின் இறுதி வெப்பநிலையானது,

(1) 30°C (2) 40°C (3) 50°C

(4) 50°C இலும் குறைவு (5) 50°C இலும் கூடியது

(6) வளிமண்டல அமுக்கத்தில் நீரின் உருகல் தன்மறை வெப்பம் மற்றும் நீரின் ஆவியாதல் தன்மறை வெப்பம் என்பன முறையே, $3\times 10^5$ J $Kg^{-1}$ மற்றும் $20\times 10^5$ J $kg^{-1}$ ஆகும். நீரின் தன் வெப்பக்கொள்ளளவு $4\times 10^3$J $K^{-1}Kg^{-1}$ எனின், வளிமண்டல அமுக்கத்தில் 0 °C இலுள்ள 2 kg பனிக்கட்டியினை 100 °C இலுள்ள நீராவியாக மாற்றத் தேவையான ஆகக்குறைந்த சக்தியினைக் காண்க.

(1) $20\times 10^5$J (2) $24\times 10^5$J (3) $27\times 10^5$ J

(4) $30\times 10^5$J (5) $54\times 10^5$J

(7) 0.5 kg திரவமொன்றினை கொண்டுள்ள பாத்திரமொன்று 15 W வலுவுடைய சுருள் ஒன்றினால் வெப்பமாக்கப்படுகையில் 70°C எனும் உறுதி வெப்பநிலையினை அடைகின்றது. வெப்பமாக்கிச் சுருளினை நிறுத்திய பின்னர் ஆரம்ப வெப்ப வீழ்ச்சி வீதமானது 1.2 $Kmin^{-1}$ ஆகும். திரவத்தின் தன்வெப்பக்கொள்ளளவினைக் காண்க. (பாத்திரத்தின் வெப்பக்கொள்ளளவினை புறக்கணிக்குக)

(1) 15 $J\,kg^{-1}K^{-1}$ (2) 25 $J\,kg^{-1}K^{-1}$ (3) 150 $J\,kg^{-1}K^{-1}$

(4) 1250 $J\,kg^{-1}K^{-1}$ (5) 1500 $J\,kg^{-1}K^{-1}$

(8) ஏரியொன்றிலுள்ள மீன் ஒன்று $2.5\times 10^{-7}m^3$ கனவளவுடைய வளிக்குமிழி ஒன்றினை விடுவிக்கின்றது. இதன் பின்னர் இவ் வளிக்குமிழியானது $10^{-6}m^3$ கனவளவுடைய வளியினை வளிமண்டலத்திற்கு விடுவிக்கின்றது. வளிமண்டல அமுக்கம் $10^5\,Pa$ மற்றும் நீரின் அடர்த்தி $10^3 kg\, m^{-3}$ எனின் மீன் ஏரியினுள் எவ்வளவு ஆழத்தில் உள்ளது என்பதனைக் காண்க.

(1) 30 m (2) 40 m (3) 50 m (4) 60 m (5) 80 m

(9) 30 atm அமுக்கம் மற்றும் 27 °C வெப்பநிலையிலுள்ள வளியானது விரிவடைந்து தனது ஆரம்ப கனவளவின் 15 மடங்கு கனவளவினையும் வளிமண்டல அமுக்கத்தினையும் அடைகின்றது. வளியின் இறுதி வெப்பநிலையானது,

(1) 27 °C (2) 54°C (3) 273°C (4) -123°C (5) 373°C

(10)




இலட்சிய வாயுவொன்று பாதை ABCA வழியே எடுத்து செல்லப்படுகையில் செய்யப்பட்ட வேலையினைக் காண்க.

(1) PV (2) 2PV (3) 3PV (4) 4PV (5) 0

(11) நீரின் நிரம்பலாவி அமுக்கம் (20°C) மற்றும் பனிக்கட்டி புள்ளி (10°C) என்பன முறையே 17.54 Hgmm மற்றும் 8.02 Hgmm ஆகும். சார்பு ஈரப்பதனினைக் காண்க.

(1) 22 % (2) 46 % (3) 30 %

(4) 56 % (5) கணிக்க முடியாது

(12) நன்கு காவலிடப்பட்ட உருளை வடிவ கோலொன்றின் வெப்பப் பாய்ச்சல் வீதம் Q ஆகும். கோலின் நீளம் மற்றும் ஆரை என்பன இரட்டிக்கப்படின் புதிய வெப்பப்பாய்ச்சல் வீதத்தினைக் காண்க. (இரு முனைகளுக்கும் இடையேயான வெப்பநிலை மாற்றம் மாறிலி எனக்கொள்க)

(1) 8Q (2) Q (3) 2Q (4) $\frac{Q}{8}$ (5) $\frac{Q}{4}$

(13) வெப்ப இயக்கவியல் செயன்முறையொன்றின் போது ஒரு குறித்த திணிவு வாயு ஒன்றின் அமுக்கம் மாற்றமடைகையில் 20 J வெப்பம் இழக்கப்படுவதுடன் வாயுவின் மீது 8 J அளவிலான வேலை செய்யப்படுகின்றது. வாயுவின் ஆரம்பச் சக்தி 30 J எனின், இறுதி அகச்சக்தியினைக் காண்க.

(1) 2 J (2) 12 J (3) 18 J

(4) 22 J (5) 28 J

(14) a ஆரையும் m திணிவும் கொண்ட கோளமொன்று ஒரு மெல்லிய இழையினால் இணைக்கப்பட்டு, அதன் அரைப்பகுதி $\rho$ அடர்த்தியுடைய திரவமொன்றினுள் அமிழ்த்தப்பட்டுள்ளது. இழையில் தொழிற்படும் இழுவை F இனைக் காண்க. திரவத்தின் மேற்பரப்பு இழுவிசை T என்க.

(1)F=mg+$2\pi rT$ (2) F=$2\pi rT$ (3) F=mg+$\pi r^2 T$+$\frac{2}{3}\pi r^3\rho g$

(4) F=mg+$2\pi rT$ -$\frac{2}{3}\pi r^3\rho g$ (5) F=$2\pi rT$-$\frac{2}{3}\pi r^3\rho g$

(15) $\rho$ அடர்த்தியுடைய திரவத்தினைக் கொண்டுள்ள பாத்திரமொன்றின் திரவ மேற்பரப்பிலிருந்து h ஆழத்தில் r ஆரையுடைய வளிக்குமிழி ஒன்று உருவாகின்றது. வளிமண்டல அமுக்கம் $\pi$ மற்றும் திரவத்தின் மேற்பரப்பு இழுவிசை T எனின் வளிக்குமிழியின் உள்ளே காணப்படும் அமுக்கம் யாது?

(1)$\frac{2T}{r} + h\rho g$ (2)$\frac{2T}{r} - h\rho g$ (3)$\pi + h\rho g + \frac{2T}{r}$

(4)$\pi + h\rho g - \frac{2T}{r}$ (5)$\pi + \frac{4T}{r}$

(16) வெப்பநிலையில் மாற்றம் ஏற்படாதவாறு r ஆரையுடைய சவர்க்கார குமிழியொன்றின் ஆரையினை இரட்டிப்பாக்குவதற்குத் தேவையான சக்தியினைக் காண்க. (சவர்க்காரக் கரைசலின் மேற்பரப்பு இழுவிசை T)

(1)$2\pi r^2$T (2)$4\pi r^2$T (3)$8\pi r^2$T (4)$12\pi r^2$T (5)$24\pi r^2$T

(17) 'R' ஆரையுடைய இரசக் துளியொன்றினை n எண்ணிக்கையிலான 'r' ஆரையுடைய துளிகளாக மாற்றுவதற்குத் தேவையான சக்தியினக் காண்க.

(இரசத்தின் மேற்பரப்பு இழுவிசை T)

(1)$(4\pi R^2 - 4\pi r^2)$nT (2) $(4\pi r^2 n - 4\pi R^2)$T (3)$(\frac{4}{3}\pi R^3 - \frac{4}{3}\pi r^3)$T

(4)$(2\pi R^2 - n2\pi r^2)$T (5) $(\frac{4}{3}\pi R^3 - \frac{4}{3}\pi r^3)$nT

(18) 'A' குறுக்கு வெட்டுப் பரப்புடைய தட்டையான தட்டொன்று ஒரு கிடை மேற்பரப்பின் மீது வைக்கப்பட்டு 'd' தடிப்புடைய திரவப்படை ஒன்றினால் வேறாக்கப்பட்டுள்ளது. திரவத்தின் பாகுமைக்குணகம் η ஆகும். தட்டினை மாறா வேகம் V உடன் அசையச்செய்ய தேவையான விசை யாது?

(1) ηAV (2) 6$\pi$ηaV (3)ηAVd

(4) ηAV/d (5) 6$\pi$ηa

(19) $V_1$ மற்றும் $V_2$ என்பன முறையே இரு வேறு திரவங்கள் ஒரு குறித்த நேர இடைவெளியில் ஒரு குறித்த குழாயினை கடக்கும் கனவளவுகள் ஆகும். $\eta_1$ மற்றும் $\eta_2$ என்பன இத்திரவங்களின் பாகுமை குணகங்கள் எனின், பின்வரும் தொடர்புகளில் சரியானது,

(1) $\frac{\eta_1}{\eta_2} = \frac{v_1}{v_2}$ (2) $\frac{\eta_1}{\eta_2} = \frac{v_2}{v_1}$ (3) $\frac{\eta_1}{\eta_2} = \frac{v_1^2}{v_2^2}$

(4) $\frac{\eta_1}{\eta_2} = \frac{v_2^2}{v_1^2}$ (5) $\frac{\eta_1}{\eta_2} = \left(\frac{v_1}{v_2}\right)^{\frac{1}{4}}$

(20) V கனவளவுடைய திண்ம பந்தொன்று திரவமொன்றினுள் இடப்படும்போது அதனால் உணரப்படும் பாகுமை விசை F ஆகும். மேற்கூறிய பந்தினை ஒத்த ஆனால் 8V கனவளவுடைய பந்தொன்று அதே திரவத்தில் இடப்படின் அப்பந்தினால் உணரப்படும் பாகுமை விசை யாது?

(1) F (2) 2F (3) 3F (4) 8F (5) 16 F

(21) சம அளவிலான இரு கோள வடிவிலான மழைத்துளிகள் V எனும் முடிவு வேகத்துடன் வளியில் மேலிருந்து கீழே விழுகின்றன. இவை இரண்டும் ஒன்றாக இணையுமாயின் பெரிய துளியின் முடிவு வேகம் யாது?

(1) $\frac{V}{2}$ (2) V (3) $2^{\frac{1}{2}} V$ (4) $2^{\frac{2}{3}} V$ (5) $2^3 V$

(22) மனித எலும்பொன்றின் யங்கின் மட்டு $10^{10}$N $m^{-2}$ ஆகும். தகைப்பானது 1% இனால் அதிகரிகப்படின் எலும்பு உடைவுக்குள்ளாகும். எலும்பின் குறுக்கு வெட்டுப்பரப்பு $3 \times 10^{-4}\, m^2$ இனால் தாங்கக்கூடிய உயர் சுமையானது, .

(1) $3\times 10^2$N (2) $3\times 10^4$N (3) $3\times 10^6$N

(4) $3\times 10^8$N (5) $3\times 10^{10}$N

(23) L நீளமுடைய XY எனும் மெல்லிய ஒப்பமான பலகையானது A, B எனும் இரு சம நீளமுடைய கம்பிகளின் மூலம் கிடையாக தொங்கவிடப்பட்டுள்ளதனை உரு காட்டுகின்றது. B இன் குறுக்கு வெட்டுப் பரப்பளவு மற்றும் யங்கின் மட்டு என்பவற்றின் பெறுமானங்கள் A இன் அரைவாசியாகும். A, B இல் சம அளவிலான நீட்சி ஏற்படும் நிலையில், பலகையினை கிடையாக பேணுவதற்கு W எனும் நிறையானது XY வழியே தொங்கவிடப்படுகின்றது. புள்ளி X இலிருந்து நிறை W இற்கான தூரத்தினைக் காண்க.




(1) L/2 (2) L/3 (3) L/5 (4) L/8 (5) L/16

(24) கம்பியொன்று F விசையினால் இழுக்கப்படும்போது கம்பியில் ஏற்படும் விகாரம் 's' ஆகும். கம்பியின் யங்கின் மட்டு Y எனின், கம்பியின் அலகுக் கனவளவில் செய்யப்பட்ட வேலை யாது?

(1) $\frac{S^2}{2Y}$ (2) $Y\frac{S^2}{2}$ (3) $\frac{1}{2}\,F\,S$ (4) $\frac{V}{2S^2}$ (5) $\frac{1}{2}\,F\,S^2$

(25) L (m) நீளமும் A ($m^2$) குறுக்கு வெட்டு பரப்பும் உடைய சீரான இறப்பர் நாடா ஒன்று நிலைக்குத்தாக தொங்கவிடப்பட்டுள்ளது. நாடாவின் அடர்த்தி $\rho\,(kg\,m^{-3})$ மற்றும் யங்கின் மட்டு Y (N $m^{-2}$) எனின், நாடாவின் திணிவின் காரணமாக ஏற்படும் இழுவையினைக் காண்க.

(1) $\frac{L^2\rho g}{Y}$ (2) $\frac{L^2\rho g}{2Y}$ (3) $\frac{L^2\rho g}{4Y}$ (4) $\frac{\mathrm{LA}\rho g}{2Y}$ (5) $\frac{\mathrm{Y}}{L^2\rho g}$

00077

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

விஞ்ஞானத் திறமைச் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

TAF2501 – பௌதிகவியல் 3

இறுதிப் பரீட்சை

காலம்: 3 மணித்தியாலங்கள்

திகதி: 23.06.2019 நேரம்: மு.ப 0930 - பி.ப 1230

பகுதி – II

- (04) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
- (04) இற்கு மேற்பட்ட வினாக்களுக்கு விடை தரப்படுமாயின் முதல் நான்கு வினாக்கள் மட்டுமே திருத்தப்படும்.
- ஒவ்வொரு வினாக்களுக்கும் (15) புள்ளிகள் வீதம் வழங்கப்படும். மொத்த புள்ளிகள் 60 ஆகும்.

(1) கலவை முறையினைப் பயன்படுத்தி பனிக்கட்டியின் உருகல் தன்மறை வெப்பத்தினை துணிவதற்காக பரிசோதனை ஒன்றினை செய்யுமாறு நீங்கள் கேட்கப்படுகின்றீர்கள்.

(a) இப்பரிசோதனைக்குத் தேவையான உபகரணங்களை பட்டியலிடுக.

**(புள்ளிகள் 02)**

(b) இப்பரிசோதனையின்போது எடுக்கப்பட வேண்டிய வாசிப்புக்கள் யாவை ?

**(புள்ளிகள் 04)**

(c) பனிக்கட்டியின் உருகல் தன்மறை வெப்பத்தினை காண்பதற்கு பயன்படுத்தப்பட வேண்டிய சமன்பாட்டினை மேலே (b) இல் தரப்பட்ட வாசிப்புக்களுடன் சம்பந்தப்படுத்தி எழுதுக.

**(புள்ளிகள் 05)**

(d) துல்லியமான முடிவினை பெறுவதற்கு எடுக்கப்பட வேண்டிய எடுகோள்கள் யாவை?

**(புள்ளிகள் 02)**

(e) சூழலுக்கான வெப்ப இழப்பினை குறைப்பதற்கு உம்மால் பயன்படுத்தப்பட்ட பரிசோதனை உத்தியினை விளக்குக.

**(புள்ளிகள் 02)**

(2)(a).பொயிலின் விதி மற்றும் சார்ல்ஸ் இன் விதியினைக் கூறுக. இதிலிருந்து PV=nRT எனும் சமன்பாட்டினை நிறுவுக. **(புள்ளிகள் 05)**

(b).'R'இன் பெறுமானத்தினை SI அலகுகளில் காண்க. (நியம வெப்பநிலை அமுக்கத்தில்,1 molஇலட்சிய வாயுவின் கனவளவு $22.4 \times 10^{-3} m^3$)

**(புள்ளிகள் 04)**

(c). அளவு கோடிடப்பட்ட இரசப் பாரமானியொன்றின் இரச நிரலுக்கு மேலே சிறிய அளவிலான வளி கனவளவொன்று காணப்படுகின்றது. குழாயின் மேற்பகுதியானது நீர்த்தேக்கத்திற்கு 1 m மேலே காணப்படுகின்றது. குழாய் நிலைக்குத்தாக காணப்படும்போது இரச நிரலின் உயரம் 700 mmஆகும். குழாயானது நிலைக்குத்துடன் $60^0$சரிவில்வைக்கப்படும்போது இரச நிரலின் வாசிப்பு950 mmஆகும். வளிமண்டல அமுக்கத்தினைக் காண்க.

**(புள்ளிகள் 06)**

(3) (a) "நியுட்டனின் குளிரல் விதி"இனைக் கூறுக. **(புள்ளிகள் 03)**

(b) நியுட்டனின் குளிரல் விதி பயன்படுத்தப்படுவதற்கான நிபந்தனைகளைத் தருக. **(புள்ளிகள் 02)**

(c) திரவமொன்றினால் நிரப்பப்பட்ட கலோரிமானியொன்றின் ஆரம்ப வெப்பநிலை 30°C ஆகும். இது ஒரு வெப்பமாக்கியினால் சூடாக்கப்படுவதன் மூலம் எனும் 70°C உறுதி வெப்பநிலையினை அடைகின்றது. இது மற்றுமொரு உயர் வலு வெப்பமாக்கியினை பயன்படுத்தி வெப்பமேற்றப்பட்டு 110°C எனும் உறுதி வெப்பநிலையினை அடைகின்றது எனின், $\frac{\text{இரண்டாவதுவெப்பமாக்கியின்வலு}}{\text{முதலாவதுவெப்பமாக்கியின்வலு}}$.இனைக் காண்க.

**(04புள்ளிகள்)**

(d) 500 J $kg^{-1}K^{-1}$ வெப்பக்கொள்ளளவும் $5\times 10^{-2}$திணிவும் உடைய உலோக உருளையானது மாறா வலுவினைக் கொண்ட ஒரு இலத்திரனியல் வெப்பமாக்கியினால் வெப்பமாக்கப்படும் போது ஆரம்ப வெப்பநிலை உயர்ச்சி வீதமானது 5 K $min^{-1}$ ஆகும். இலத்திரனியல் வெப்பமாக்கியினை நிறுத்திய பின்னர் ஆரம்ப வெப்ப வீழ்ச்சி வீதமானது 0.5 K $min^{-1}$ இலத்திரனியல் வெப்பமாக்கியினை நிறுத்துவதற்கு சற்று முன்னர் உலோக உருளை பெற்ற வெப்ப வீதத்தினைக் காண்க.

**(06புள்ளிகள்)**

(4)(a) வெப்ப இயக்கவியலின் முதலாம் விதியினைக் கூறுக. **(02புள்ளிகள்)**

(b) ஓரணு இலட்சிய வாயு ஒன்றின் பாதை ABCDA வழியேயான செயன்முறைக்கான P-V வரைபினை உரு காட்டுகின்றது. ABCDA வழியே செய்யப்பட்ட வேலையினைக் காண்க. **(04புள்ளிகள்)**




(c)$1\times 10^5$Pa அமுக்கம் மற்றும் $100^0$Cவெப்பநிலையில்1 kg நீராவியானது1.67 $m^3$கனவளவினை அடைக்கின்ற அதேவேளையில் சம திணிவுடைய நீரானது 1.04 $\times 10^{-3}m^3$எனும் கனவளவினை அடைக்கின்றது. 1 kg நீரினை $1\times 10^5$Pa அமுக்கம் மற்றும் $100^0$C வெப்பநிலையிலுள்ள நீராவியாக மாற்றப்படும் தொகுதியின்,

(a) தொகுதிக்கு வழங்கப்படும் வெப்பம்.

(b) தொகுதியினால் செய்யப்பட்ட வேலை

(c) தொகுதியின் அகச்சக்தியில் ஏற்படும் அதிகரிப்பு.

என்பவற்றினைக் காண்க. **(09புள்ளிகள்)**

**(5)** (a) திரவமொன்றின் மேற்பரப்பு இழுவிசையினை வரையறுக்குக. .

**(02புள்ளிகள்)**

(b)'r'ஆரையும்'T'மேற்பரப்பு இழுவிசையும் உடைய வளிக்குமிழி ஒன்றினுள்ளே காணப்படும் மேலதிக அமுக்கத்திற்கான சமன்பாட்டினை நிறுவுக.

**(03புள்ளிகள்)**

(c) 'r'ஆரையும் கோளமொன்று ஒரு மெல்லிய இழையினால் இணைக்கப்பட்டு, அதன் அரைப்பகுதி 'ρ'அடர்த்தியுடைய திரவமொன்றினுள் அமிழ்த்தப்பட்டுள்ளது.

(திரவத்தின் மேற்பரப்பு இழுவிசை 'T' மற்றும் கோளம் ஆக்கப்பட்ட பதார்த்தத்தின் அடர்த்தி $\sigma$ ஆகும்)

(i) கோளத்தின் மீது தொழிற்படும் மேற்பரப்பு இழுவிசையினைக் காண்க.
(ii) இழையில் தொழிற்படும் இழுவையினைக் காண்க. **(06 புள்ளிகள்)**

(d) நீர் மேற்பரப்பிலிருந்து 1000 m ஆழத்தில் உருவாகும் 3 mm ஆரையுடைய வளிக்குமிழி ஒன்றினுள்ளே காணப்படும் அமுக்கத்தினைக் காண்க.
(நீரின் மேற்பரப்பு இழுவிசை 0.072 N$m^{-1}$, நீரின் அடர்த்தி 1000 $kg\,m^{-3}$, வளிமண்டல அமுக்கம் $10^5\,N\,m^{-2}$) **(04 புள்ளிகள்)**

**(6)** (a) 'a' ஆரையுடைய கோளமொன்று $\eta$ பாகுமையுடைய திரவமொன்றினுள் V வேகத்துடன் இயங்கும்போது தொழிற்படும் விசை F ஆனது, சமன்பாடு F= $6\pi\eta^x a^y v^z$ இனால் தரப்பட்டுள்ளது. x, y மற்றும் z இன் பெறுமானங்களைக் காண்க. **(03 புள்ளிகள்)**

(b) 'a' ஆரையுடைய கோள வடிவிலான பந்தொன்று 'ρ' அடர்த்தியும் η பாகுநிலை குணகமும் உடைய ஊடகமொன்றில் கீழ்நோக்கி விழுகின்றது. பந்தின் இயக்கத்தினை விளக்குக. இப்பந்தானது **முடிவு வேகம்** எனும் மாறா வேகத்தினை அடைவதற்கான காரணத்தினை விளக்குக. **(05 புள்ளிகள்)**

(c)பந்தின் முடிவு வேகத்திற்கான சமன்பாட்டினை பெறுக.
பந்தின் அடர்த்தி 'σ' ஆகும். **(03 புள்ளிகள்)**

(d)பந்தின் இயக்கத்திற்கான வேக-நேர (v-t) வரைபு, இடப்பெயர்ச்சி-நேர (s-t) வரைபு மற்றும் ஆர்முடுகல்-நேர (a-t) வரைபு என்பவற்றினை வரைக.
**(04 புள்ளிகள்)**